II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Atlas published by Union Government

*21 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn by the citizens of Kumbakonam, that in 1964 Edition of the Atlas brought out by the Union Education Ministry, the description of Kumbakonam as "the seat of Sri Sankaracharya Math" has been left out; and

(b) if so, whether the Government has made any recommendation to the Union Government in this regard?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes.

திரு. வை. சங்கரன் : எப்போது இம்மாதிரி சிபாரிசு செய்யப் பட்டது, என்ன முறையிலே சிபாரிசு செய்யப்பட்டது, என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சங்கராச்சாரியார் மடத்தினு டைய தலைமை ஸ்தாபனம் என்று 1964 எடிஷன் ஸ்கூல் அட்லாசிலே இருந்தது. இந்த கவர்ன்மெண்டுக்கு அது எடுக்கப்பட்டுவிட்டது என்ற தகவல்பற்றி மனு வந்தது. அதற்குமேல் முன்னே இருந்த படி போடவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப் பட்டது.

பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை

*22 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்ட பொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சி அரண்மனை அரசினரால் பாதுகாக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாஞ்சாலங்குறிச்சியில், வீர பாண்டிய கட்டபொம்மனின் அரண்மனை இருந்த இடத்தைப் பாதுகாக்கவும், அங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளவும் மாநிலத் தொல் பொருள் ஆராய்ச்சித்துறை திட்டமிட்டுள்ளது.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, விடுதலைப் போராட் டத்தில் முன்னோடியாக இருந்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியில் இதுவரையிலும் எந்தவிதமான ஞாபகார்த்த சின்னமே இல்லாமல் பாதுகாக்கப்படாமலேயே சுடுகாடாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, எப்போது இதற்கான வேலையை எடுத்துச் செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆர்க்கயலாஜிகல் இலாகாவால் இதற்கான ஆராய்ச்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

2nd August 1966]

திரு. சா. கணேசன் : இப்போது அந்த இடத்தில் பெரும்பாலும் இடிபாடுகளேயன்றி, ஒரு குளம், ஒரு சிறிய கோவில் இவைகளைத் தவிர வேறு ஒன்றுமே குறிப்பிடத்தக்கதாகக் காணப்படவில்லை. அங்கே கட்டபொம்மன் காட்டிய தேசபக்தியை வெளியிடுவதற்குச் சான்றாக அல்லது எடுத்துக்காட்டாகச் சில கட்டடங்கள் அல்லது ஞாபகச் சின்னங்கள் கட்டி அதன்மூலம் அவர்களுடைய தேச பக்தியை அல்லது ஞாபகத்தைக் காட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல் இப்போது ஒரு மேடுதான் அங்கே இருக்கிறது. முன்பு இருந்த அரண்மனைக் கட்டடங்களெல்லாம் இப்போது மறைந்து போய் விட்டன. பூமியின் கீழ் ஆராய்ச்சி செய்து, என்ன தகவல் கிடைக்கிறதோ அதை வைத்துக்கொண்டு அதற்குமேல் என்ன செய்ய வேண்டும் என்பது முடிவு செய்யப்படும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அங்கே கோட்டை இருந்த போது பீரங்கித் தாக்குதலையும் சமாளிப்பதற்கான தகுந்த முறையில் அவ்வளவு பலம் பொருந்திய கட்டடம் இருந்ததாகத் தெரிகிறது அங்குள்ள இடிபாடுகளைப் பார்க்கிறபோது. இந்தப் புதைபொருள் ஆராய்ச்சி செய்கிறபோது அந்தக் கட்டடங்களை பலமாகக் கட்டுவதற்கு என்ன என்ன சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதையும் ஆராய்ச்சி செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவைகள் மறைந்து போய் விட்டன என்று சொன்னேன். மறைந்து போய்விட்ட கட்டடத்தை எப்படி ஆராய்ச்சி செய்வது என்று தெரியவில்லை. ஆனால் • பூமியின் கீழ் எந்த அளவிற்கு ஆராய்ச்சி செய்யமுடியும் என்பதைப் பார்க்கலாம்.

திரு. நா. இராசாங்கம் : கட்டபொம்மனுக்கு அடைக்கலம் கொடுத்ததற்குக் காரணமாக இருந்த சிவகங்கைச் சீமை மருது பாண்டியர் பரம்பரையினர் செய்த தொண்டின் ஞாபகார்த்தமாக அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member may put a separtte question.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் அம்மாதிரி ஒன்றும் செய்யவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சாதாரண இடங்களைப் பாதுகாப்பதற்கு நமது சர்க்கார் முன்வருகிறதே, அப்படியிருக்கும்பொழுது பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் குடியிருந்த இடத்தைப் பாதுகாக்காததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பாதுகாக்கப்பட வேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அங்கு மேடு தான் இருக்கிறது ; அது பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரண்மனை

இருந்த இடம் பாதுகாக்கப்படவில்லை என்றால் அதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பல்ல.

திரு. சி. பொன்னுசாமி : பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் இருந்த காலத்தில் இருந்த அரண்மனை, குதிரை கட்டும் இடம் ஆகியவைகளினுடைய அஸ்திவாரங்கள் இருக்கின்றன. இந்த அஸ்திவாரங்களை அப்படியே வைத்து இருந்தால் அங்கே என்னென்ன இருந்தன என்பதை எடுத்துச்சொல்ல முடியும். ஆகவே, புதை பொருள் ஆராய்ச்சி செய்யும்போது அந்த அஸ்திவாரங்களுக்குச் சேதம் வாராமல் கவனமாகச் செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதைபொருள் ஆராய்ச்சி செய்பவர்கள் அனுபவப்பட்டவர்கள். பூமியின் கீழ் ஆராய்ச்சி செய்து என்னென்ன இருக்கிறதென்று பார்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : வீரபாண்டிய கட்டபொம்மன் வம்சாவளியில் யாராவது இருக்கிறார்களா ? அப்படியானால், அவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றிய விவரம் முன்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

கிராக்கிப்படியைச் சம்பளத்துடன் இணைக்கும் திட்டம்

*23 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களுக்கு இப்போது அளிக்கப்படும் கிராக்கிப்படியை சம்பளத்தோடு இணைக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பொருளாதாரம் வளர்ச்சி அடைந்திருப்பதாக நாமே ஒப்புக்கொள்கிறோம். அப்படியிருக்கும்பொழுது ஏன் அரசாங்கம் கிராக்கிப்படியைத் தனியாக வைத்திருக்க வேண்டும் ? அதைச் சம்பளத்துடன் இணைத்தால் வேறு சில நன்மைகள் ஏற்படும் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விஷயம் அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஓரளவு கிராக்கிப்படி இணைக்கப்பட்டுத்தான் இருக்கிறது.